


புதுகை வரலாறு நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வெள்ளி ❖ பிப்ரவரி. 24, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 141 ❖ ரூ.10

### உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பால் ஈபிஎஸ் வசமானது அதிமுக

# அதிர்ச்சி

## அதிமுக பொதுக்குழுவிற்கு எதிராக ஓபிஎஸ் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு தள்ளுபடி

## தர்மம், நீதி, உண்மை வென்றுள்ளதாக ஈபிஎஸ் பேட்டி

புதுடெல்லி, பிப். 24–

அதிமுக பொதுக்குழுக் கூட்டத்திற்கு எதிராக ஓபிஎஸ் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்த உச்ச நீதிமன்றம், பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு எதிராக எந்த கோரிக்கையும் தங்கள் முன்பு வைக்கப்படவில்லை. எனவே, தீர்மானங்கள் மீது எந்த உத்தரவும் பிறப்பிக்க போவதில்லை என்று தீர்ப்பளித்துள்ளது.

அதிமுக கட்சி விதிகளின்படி 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை உள்கட்சி தேர்தல் நடத்தப்படுகிறது. அந்த வகையில், சில மாதங்களாக ஒருங்கிணைப்பாளர்கள் முதல் கிளைச்செயலாளர் வரையிலான பதவிகளுக்கு தேர்தல் நடத்தப்பட்டு, நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகள் பட்டியலை, கட்சியின் பொதுக்குழுவில் வைத்து ஒப்புதல் பெற்று, அதன்பின் தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

இதற்காக, 2022 ஜூன் 23-ம் தேதி அதிமுக செயற்குழு, பொதுக்குழு கூட்டம் நடக்கும் என அறிவிக்கப்பட்டிருந்தது. பொதுக்குழு கூட்டத்தை தள்ளிவைக்க வேண்டும் என்று பழனிசாமிக்கு ஓபிஎஸ் கடிதம் எழுதினார். ஆனால், திட்டமிட்டப்படி ஜூன் 23-ம் தேதி அதிமுக பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த பொதுக்குழுக் கூட்டத்துக்குதடைவிதிக்க கோரி ஓபிஎஸ் தொடர்ந்த வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற தனி நீதிபதி பொதுக்குழுக் கூட்டம் நடத்தலாம் என்று உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து ஓபிஎஸ் தொடர்ந்த மேல்முறையீட்டு வழக்கை விசாரித்த இரு நீதிபதிகள் அமர்வு அளித்த உத்தரவின் அடிப்படையில் அந்தப் பொதுக்குழுக்

2ம் பக்கம் தொடர்ச்சி



### அனைவரும் எங்கள் பக்கம் வருவார்கள்: ஈபிஎஸ்

மதுரையில் அதிமுக இடைக்கால பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களிடம் கூறுகையில்: உச்ச நீதிமன்ற தீர்ப்பின் மூலம் தர்மம், நீதி, உண்மை வென்றுள்ளது. சட்டப் போராட்டம் மூலம் அதிமுகவுக்கு முழு வெற்றி கிடைத்துள்ளது. அதிமுக பொதுக்குழு செல்லும் என்ற அற்புதமான தீர்ப்பு கிடைத்துள்ளது. அதிமுக நிர்வாகிகள் கூடி விரைவில் பொதுச் செயலாளர் தேர்வு நடக்கும். ஒரு சிலரைத் தவிர யார் வந்தாலும் அதிமுகவில் சேர்த்துக் கொள்வோம். நாடாளுமன்ற தேர்தலுக்கு இன்னும் நாள் உள்ளது. திமுக கூட்டணிக்கு பயம் வந்துவிட்டது. இதனால் தான் வாக்காளர்களை அடைத்து வைக்கின்றனர். இதுவே எங்களுக்கு கிடைத்த முதல் வெற்றி. அதிமுக வலுவாக உள்ளது. இனிமேல் அனைவரும் எங்கள் பக்கம் வருவார்கள். சிறப்பாக பணியாற்றி, மீண்டும் நல் ஆட்சியை கொடுப்போம்."






# இன்று

24-2-23



செல்வி ஜெ. ஜெயலலிதா பிறந்த நாள்

அரைக்கீரை : தோல் நோய் போக்கும். குடல் புண் ஆற்றும். உடல் தளர்ச்சி நீக்கும்
சக வருடம் 1944 பால்குன 05

| | | | |
|---|---|---|---|
| சுபகிருது மாசி 12 | FEB - FRI வெள்ளி | ஷ:பான் 3 | இராசிபலன் |

வளர்பிறை 055 / 310

வளர். சதுர்த்தி 01.07 (கா. 06.58) பஞ்சமி 57.36 (கா. 05.33) ரேவதி 05.41 (கா.08.47) தியாஜ் 55.34 அகஸ் 29.20 அமிர்த. மதுரை கூடலழகர் உற்சவம் ஆரம்பம். வேதாரண்யம் சிவபெருமான் புறப்பாடு. சுவாமிமலை முருகப் பெருமான் தங்கக் கவசம் அணிந்து வைரவேல் தரிசனம். சிறியநகக.

| | நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 9.30-10.30 | 12.30-1.30 | 10.30 | 07.30 | 03.00 |
| மாலை | 4.30-5.30 | 6.30-7.30 | 12.00 | 09.00 | 04.30 |

சூலம் : மேற்கு; பரிகாரம் : வெல்லம்; கும்ப லக்னம் இருப்பு நா. 3 வி. 00; சந்திராஷ்டமம் : உத்திரம்; கரணம் : 1.30-3; சூரிய உதயம் : 6.31

கேடுவான் கேடு நினைப்பான்

இராசிபலன்: மேஷம் - யோகம்; ரிஷபம் - சிரமம்; மிதுனம் - துணிவு; கடகம் - ஆர்வம்; சிம்மம் - நற்செயல்; கன்னி - வெற்றி; துலாம் - லாபம்; விருச்சி - நிம்மதி; தனுசு - புகழ்; மகரம் - போட்டி; கும்பம் - அமைதி; மீனம் - ஓய்வு

## சிந்திப்போம்.... செயல்படுவோம்




புதுக்கோட்டையில் மிகப்பெரிய தங்க நகை ஷோரூம்
ஸ்ரீ பார்வதி'ஸ் ஜுவல்லர்ஸ்
தங்க நகை தயாரிப்பாளர்கள்
TS.No.3208 கீழராஜ வீதி, புதுக்கோட்டை– 1
Cell : 98433 07916,04322233544

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs. 5,245 | Rs. 5,607 |


# 22–வது சட்ட ஆணையத்தின் பதவிக்காலத்தை அடுத்த ஆண்டு ஆகஸ்ட் 31–ந் தேதி வரை நீட்டிக்க மத்திய அமைச்சரவை முடிவு

டெல்லி பிப்.24–

22-வதுசட்டஆணையத்தின் பதவிக்காலத்தை அடுத்த ஆண்டு ஆகஸ்ட் 31-ந் தேதி வரை நீட்டிக்க மத்திய அமைச்சரவை முடிவுசெய்தது.

பிரதமர் மோடி தலைமையில் மத்திய அமைச்சரவை கூட்டம் நடைபெற்றது. அதில், 22-வது சட்ட ஆணையத்தின் பதவிக் காலத்தை நீட்டிக்க முடிவு செய்யப்பட்டது. இதன் பதவிக்காலம், கடந்த 20-ந் தேதியுடன் முடிவடைந்தது. தற்போது, அடுத்த ஆண்டு ஆகஸ்ட் 31-ந் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. சட்ட ஆணையத்தில் ஒரு முழுநேர தலைவரும், 4 முழு நேர உறுப்பினர்களும், 5 பகுதி நேர உறுப்பினர்களும்




இடம் பெற்றுள்ளனர். பழமையான சட்டங்களை கண்டறிந்து நீக்க கோருவது உள்பட ஒப்படைக்கப்பட்ட அனைத்து பணிகளையும் சட்ட ஆணையம் கவனிக்கும்.

கயானா நாட்டுடன் விமான சேவை ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு மத்திய மந்திரிசபை ஒப்புதல் அளித்தது. கடந்த 2012-ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, கயானா நாட்டில் கணிசமான இந்தியர்கள் வசித்து வருகிறார்கள். அங்குள்ள மொத்த மக்கள் தொகையில் 40 சதவீதம் பேர் இந்திய வம்சாவளியினர் ஆவர். எனவே, இந்த ஒப்பந்தம் இந்தியா-கயானா இடையே விமான சேவை தொடங்க வழிவகுக்கும். இருநாடுகளும் உரிய நடைமுறைகளை முடித்த பிறகு ஒப்பந்தம் கையெழுத்தாகும். சர்வதேச சிவில் விமான போக்குவரத்து தொடர்பான சிகாகோ பிரகடனத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. அவற்றில் ஒரு திருத்தம், பயணிகள் விமானத்துக்கு எதிராக உறுப்பு நாடுகள் ஆயுதங்கள் பயன்படுத்துவதை தடுக்கிறது.

# தஜிகிஸ்தான், சீனா எல்லையில் தொடர்ந்து 6 முறை நிலநடுக்கம்

தஜிகிஸ்தான் பிப்.24–

தஜிகிஸ்தானில் அடுத்தடுத்து 6 முறை நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. இதனால் மக்கள் பீதியில் உறைந்துள்ளனர்.

தஜிகிஸ்தானில் அடுத்தடுத்து 6 முறை நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. இதனால் மக்கள் பீதியில் உறைந்துள்ளனர். முதல் நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.8-ஆக பதிவான நிலையில், 2-வது நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5 ஆக பதிவாகியுள்ளது.

தொடர்ந்து, 3வது நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.6 ஆக பதிவானது. 4-வது நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.9ஆக பதிவு. 5வது நிலநடுக்கம் தஜிகிஸ்தான்- சீன எல்லை சின்ஜியாங்கில் ரிக்டர் அளவுகோலில் 4.8ஆக பதிவாகியுள்ளது. 6-வது நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.7 ஆக பதிவாகியுள்ளது. அதிகபட்சமாக 6.8 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதால் மக்கள் அச்சம் அடைந்துள்ளனர். 5.0, 4.6, 4.9, 4.8 மற்றும் 4.7 ரிக்டர் அளவில் அடுத்தடுத்து ஏற்பட்ட நிலநடுக்கத்தால் மக்கள் பீதி அடைந்துள்ளனர்.

## உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பால் ஈபிஎஸ் வசமானது அதிமுக...

முதல் பக்க தொடர்ச்சி..

கூட்டத்தில் ஒற்றைத் தலைமை தொடர்பாக எந்த தீர்மானமும் நிறைவேற்றப்படவில்லை. அதிமுக பொதுக்குழு ஜூலை 11-ம் தேதி மீண்டும் கூடும் என்று அறிவிக்கப்பட்டது.

2022 ஜூலை 11ம் தேதி கூட்டப்படவிருந்து அதிமுக பொதுக்குழுக் கூட்டத்திற்கு தடை விதிக்க கோரி ஓபிஎஸ் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மீண்டும் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி, அதிமுக பொதுக்குழுவை நடத்த தடையில்லை என்று தீர்ப்பளித்தார். இதனையடுத்து, அவைத்தலைவர் தமிழ்மகன் உசேன் ஒப்புதல் பெறப்பட்டு 16 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. மேலும் கட்சியின் இடைக்காலப் பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி தேர்வு செய்யப்பட்டார். மேலும் கட்சியின் ஒருங்கிணைப்பாளர்,இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகள் ரத்து செய்யும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதைத்தொடர்ந்து, ஜூலை 11ம் தேதி நடந்த அதிமுக பொதுக்குழுக் கூட்டத்தை செல்லாது என அறிவிக்கக்கோரியும், இந்த பொதுக்குழு சட்டவிரோதமானது என அறிவிக்கக்கோரியும் ஓபிஎஸ் மற்றும் அவரது ஆதரவாளர்கள் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், ஜூலை 11ம் தேதி நடைபெற்ற அதிமுக பொதுக்குழு செல்லும் என்று தீர்ப்பளித்தது. இந்த தீர்ப்பை எதிர்த்து ஓபிஎஸ் மற்றும் அவரது ஆதரவாளர் வைரமுத்து சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தினேஷ் மகேஸ்வரி மற்றும் ரிஷிகேஷ் ராய் ஆகியோர் அடங்கிய அமர்வு நேற்று தீர்ப்பளித்தனர். அதில், "ஜூலை 11ம் தேதி நடைபெற்ற அதிமுக பொதுக்குழு நடத்தப்பட்ட வழிமுறைகள் குறித்து ஆராயப்பட்டது. உரிய சட்டவிதிமுறைகள் கடைபிடிக்கப்பட்டனவா? என்பது குறித்தும் ஆராயப்பட்டன. அதன் அடிப்படையில்,அதிமுக பொதுக்குழு தொடர்பான வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உறுதி செய்யப்படுகிறது. கடந்தாண்டு ஜூலை 11ம் தேதி நடைபெற்ற அதிமுக பொதுக்குழு செல்லும்.

மேலும், பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்குஎதிராக எந்த கோரிக்கையும் எங்கள் முன்பு வைக்கப்படவில்லை. எனவே, தீர்மானங்கள் மீது எந்த உத்தரவும் பிறப்பிக்கபோவதில்லை. எதிர்காலத்தில் இது தொடர்பாக வழக்கோ அல்லது தேர்தல் ஆணையத்தில் முறையீடு யாரேனும் தாக்கல் செய்தால் அப்போது அதன் மீதான நடவடிக்கைகள் சட்டப்படி தொடரும்.

அதேபோல் பன்னீர்செல்வம் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ள வழக்கு மீதான விசாரணை நடைபெறுவதில் எந்த பிரச்சினையும் இல்லை எனக்கூறி, ஓபிஎஸ் உள்ளிட்டோர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுக்கள் மற்றும் இடையீடு மனுக்கள் அனைத்தையும்தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

### மேல்முறையீடு செய்வோம் வைத்தியலிங்கம்

"பொதுக் குழு செல்லும் என்று தான் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. தீர்மானங்கள் செல்லும் என்று கூறவில்லை. நாங்கள் தீர்மானங்களை எதிர்த்து மேல்முறையீடு செய்வோம். இது எங்களுக்கு பெரிய பாதிப்பு இல்லை. முழு தீர்ப்பை பார்த்த பிறகு அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்போம்."

கார்த்திக் மெஸ்
உயர்தர அசைவ உணவகம்
Rtn. S.மூர்த்தி & பிரதர்ஸ்
சிவகாமி அம்மன் இரத்ததான கழகம்
புதுக்கோட்டை மாவட்ட இயற்கை விவசாயிகள் சங்கம்
புதிய பேருந்துநிலையம் எதிரில், புதுக்கோட்டை
செல் : 94426 42437



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில், ஆதிமுக தென்காசி வடக்கு மாவட்ட செயலாளரும், கடையநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான, கிருஷ்ணமுரளி குட்டியப்பா அதிமுக வேட்பாளர் தென்னரசுக்கு ஆதரவாக இரட்டை இலை சின்னத்தில் வாக்கு சேகரித்தார். உடன் முன்னாள் அமைச்சர் காமராஜ், கடையநல்லூர் வடக்கு ஒன்றிய அதிமுக செயலாளர் வசந்தம், முத்துப்பாண்டி, கடையநல்லூர் தெற்கு ஒன்றிய அதிமுக செயலாளர் ஜெயக்குமார், அண்ணா தொழிற்சங்க செயலாளர் கந்தசாமி பாண்டியன், மற்றும் அதிமுக நிர்வாகிகள் கலந்து கொண்டு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

# 3 ஆண்டுகளாக கொரோனா பயத்தில் அடுக்குமாடி குடியிருப்பில் மகனுடன் அடைந்திருந்த பெண்

அரியானா பிப்.24–

கொரோனா பயத்தில் அடுக்குமாடி குடியிருப்பில் மகனுடன் அடைந்திருந்த பெண், 3 ஆண்டுகளுக்குப் பிறகு மீட்கப்பட்டார்.



அரியானா மாநிலம், குருகிராம் பகுதியில் கொரோனா தொற்றுக்கு பயந்து அடுக்குமாடி குடியிருப்பில் 3 ஆண்டுகளாக அடைந்திருந்த பெண் மற்றும் அவரது மகனை காவல்துறையினர் மீட்டனர். இது தொடர்பாக குழந்தைகள் நலக்குழு உறுப்பினர் உஷா சோலங்கி செய்தியாளர்களிடம் கூறியதாவது, குருகிராமில் உள்ள சக்கர்பூரில் வசிக்கும் ஒருவர், கொரோனா பயம் காரணமாக கடந்த 3 ஆண்டுகளாக தனது மனைவியும் மகனும் ஒரு குடியிருப்பில் அடைந்திருப்பதாக போலீசாரிடம் புகாரளித்தார். அவரது மனைவிதன்னைவீட்டிற்குள் விடவில்லை என்றும் தன் மகனை வெளியே அனுப்ப மறுப்பதாகவும் கூறினார்.

வேலை காரணமாக வெளியே செல்வதால் வேறொரு பிளாட் வாங்கும்படி கூறியதாகவும் தெரிவித்தார். அவர்களுக்குதேவையான பணம், மளிகைப் பொருட்களை அவர் வாங்கி கொடுத்துள்ளார். இந்தநிலையில்இதுகுறித்து வழக்கு பதிவு செய்த போலீசார் ஒரு குழுவை அந்த குடியிருப்புக்கு அனுப்பினர். இதையடுத்து அந்த பெண் மற்றும் அவரது மகன் இருவரும் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அவரதுமகனுக்குதற்போது 11 வயதாகிறது. அந்த பெண்ணின் மனநிலை பரிசோதிக்கப்பட உள்ளதாக கூறினார்.

# மதுரை அவனியாபுரத்தில் தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பின் மண்டல கூட்டம்



மதுரை பிப்.24–

மதுரை அவனியாபுரத்தில் தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பின் மண்டல கூட்டம் மாவட்ட தலைவர் செல்லமுத்து தலைமையில் நடைபெற்றது.

மதுரை அவனியாபுரம் பைபாஸ் ரோட்டில் அமைந்துள்ள அசல் மலபார் பீடி மஹாலில் மாவட்ட தலைவர் செல்லமுத்துதலைமையில் தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பின் மண்டல கூட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் அழகேசன் வரவேற்புரை நிகழ்த்த மாநிலத் தலைவர் விக்ரமராஜா விழா பேருரை நிகழ்த்த, சிவகங்கை மாவட்ட தலைவர் பாலகுருசாமி மற்றும்பொறுப்பாளர்கள் ராமநாதபுரம் மாவட்ட தலைவர் ஜெகதீசன் மற்றும் நிர்வாகிகள், மாநில கூடுதல் செயலாளர் பெரிஸ் மகேந்திரவேல், மாநிலத் துணைத் தலைவர் டேனியல், தங்கராஜ், பாண்டியன் மாநில இணைச் செயலாளர்கள் திருமுருகன், சுரேஷ் பாபு, மாவட்டத்துணைத் தலைவர் வெங்கடேசன், வழக்கறிஞர் கிருஷ்ணகுமார், ஜிஎஸ்டி ஆலோசகர் கிருஷ்ணசாமி ஆகியோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். நிறைவாக மாவட்ட பொருளாளர் லட்சுமிகாந்தன் நன்றியுரை கூறினார்.

# கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் அருகே டிராக்டர் மீது தனியார் ஆம்னி பேருந்து மோதிய விபத்தில் 5 பேர் பலி

கிருஷ்ணகிரி பிப்.24–

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் அருகே டிராக்டர் மீது தனியார் ஆம்னி பேருந்து மோதியதில் 5 பேர் உயிரிழந்தனர்.

தருமபுரியில் இருந்து ஆந்திராவுக்கு பணிக்கு சென்ற டிராக்டர் மீது தனியார் ஆம்னி பஸ் மோதியதில் 5 பேர் உயிரிழந்தனர். கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் எர்ரஹள்ளி அருகே டிராக்டர் மீது தனியார் ஆம்னி பஸ் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 5 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த தருமபுரியைச் சேர்ந்த 7 பேர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர். தருமபுரி மாவட்டம் சவலூரை சேர்ந்த முத்து(20), மல்லி(60), முனுசாமி(50), வசந்தி(45), 3 மாத குழந்தை வர்ஷினி ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

# உக்ரைனில் நீடித்த அமைதியை வலியுறுத்தி ஐ.நா.வில் வரைவு தீர்மானம்

உக்ரைன் பிப்.24–

உக்ரைனில் நீடித்த அமைதியை வலியுறுத்தி ஐ.நா. பொதுசபையில் கொண்டுவரப்பட்டுள்ள வரைவு தீர்மானத்தை ஆதரிக்கும் படி இந்தியாவை உக்ரைன் வலியுறுத்தி உள்ளது.

உக்ரைன் மீது ரஷியா போர் தொடுத்து வரும் விவகாரத்தில் இந்தியா தொடர்ந்து நடுநிலையை கடைப்பிடித்து வருகிறது. இதன் காரணமாக போர் தொடர்பாக ஐ.நா.வில் கொண்டு வரப்படும் தீர்மானங்களை இந்தியா பெரும்பாலும் புறக்கணித்து வருகிறது. இந்த நிலையில் உக்ரைன் போர் ஓராண்டை நிறைவு செய்வதையொட்டி உக்ரைனில் நீடித்த அமைதியை வலியுறுத்தி ஐ.நா. பொதுசபையில் கொண்டுவரப்பட்டுள்ள வரைவு தீர்மானத்தின் மீது இன்னும் சில நாட்களில் ஓட்டெடுப்பு நடத்தப்படவுள்ளது. இந்த தீர்மானத்தை ஆதரிக்கும் படி இந்தியாவை உக்ரைன் வலியுறுத்தி உள்ளது.

## இந்தியாவிடம் ஆதரவு கோரிய உக்ரைன்



இது தொடர்பாக உக்ரைன் அதிபர் அலுவலகத்தின் தலைவர் ஆண்ட்ரி யெர்மக், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

இது குறித்து ஆண்ட்ரி யெர்மக் கூறியதாவது:- இந்தியாவுடனான ஒத்துழைப்பு எங்களுக்கு மிகவும் முக்கியமானது. எங்களின் தீர்மானத்தை நீங்கள் ஆதரிப்பீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம், ஏனெனில் அதில் எல்லைகள் மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு பற்றிய சரியான வார்த்தைகள் உள்ளன. எங்கள் இலக்குகள் வெளிப்படையானவை மற்றும் தெளிவானவை: நாங்கள் ரஷியாவின் ஒரு சென்டிமீட்டர் நிலத்தை கூட உரிமை கோரவில்லை. ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் இருக்கும் எங்களுடைய பிரதேசத்தை திரும்பப் பெற நாங்கள் விரும்புகிறோம். இந்தத் தீர்மானம் எங்களுக்கு அடிப்படையானது, ஏனெனில் இது சர்வதேச சட்டம் மற்றும் ஐ.நா. சாசனத்திற்கு உலகில் மரியாதையை மீட்டெடுக்கிறது. ஒரு நாடு தனது பிரதேசத்தை கைப்பற்ற முயற்சிப்பதைத் தடுக்க பிராந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பது மிகவும் முக்கியமானது. இந்த கொள்கைகளை இந்தியாவும் உலகின் பெரும்பான்மையான நாடுகளும் பகிர்ந்து கொள்கின்றன என்று நாங்கள் நம்புகிறோம். இவ்வாறு ஆண்ட்ரி யெர்மக் கூறினார்.



இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணத்தில் அரசு தலைமை மருத்துவமனையில் மாவட்ட ஆட்சியர் ச.வளர்மதி திடீர் ஆய்வு செய்து சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்தார். உடன் வருவாய் கோட்டாட்சியர் பாத்திமா, வட்டாட்சியர் சண்முகசுந்தரம், அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் மரு.நிவேதிதா துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# விபத்து ஏற்படுத்திவிட்டு போலி ஆவணம் தாக்கல் லாரி உரிமையாளர் மீது இன்சூரன்ஸ் நிறுவனம் புகார்

ஆலங்குடி பிப்.24–

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகே நெடுவாசல் மேற்கு பகுதியைச் சேர்ந்த அய்யாக்கண்ணு மகன் முருகேசன் .கடந்த 2021 ஆண்டு பிப்ரவரி 23-ம் தேதி இரவு கைகாட்டி - பேராவூரணி சாலையில் தனது மோட்டார் சைக்கிளில் சென்ற போது அந்த வழியாகச் சென்ற லாரி மோதி தலையில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். இந்த சம்பவம் குறித்து வடகாடு காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. அப்போது விபத்து ஏற்படுத்திய லாரிக்கான காப்பீடு உள்ளிட்ட ஆவணங்கள் பெறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் முருகேசன் உறவினர்கள் புதுக்கோட்டை மோட்டார் வாகன விபத்து உரிமை நீதிமன்றத்தில் காப்பீட்டு நிறுவனம் ரூ. 50 லட்சம் எங்களுக்கு தர வேண்டும் என்று வழக்கு தொடர்ந்துள்ளனர். இது சம்பந்தமாக நீதிமன்றம் சம்பந்தப்பட்ட 'கோ டிஜிட் சென்ட்ரல் இன்சூரன்ஸ்' நிறுவனத்திற்கு சம்மன் அனுப்பி இருந்தது. இந்த நிலையில் கோ டிஜிட் சென்ட்ரல் இன்சூரன்ஸ் நிறுவனம் சென்னை, தேனாம்பேட்டை அலுவலகத்தில் சட்டம் மற்றும் புலனாய்வுப் பிரிவு மேலாளர் விஜயலெட்சுமி புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் மூலம் வடகாடு காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்துள்ளார்.

அந்த புகாரில் கடந்த 2021 ஆண்டு பிப்ரவரி 23-ம் தேதி பேராவூரணி - கைகாட்டி சாலையில் நடந்த விபத்தில் முருகேசன் என்பவர் உயிரிழந்துள்ளார். அதனால் விபத்து ஏற்படுத்திய லாரி காப்பீடு செய்துள்ள கோ டிஜிட் நிறுவனம் ரூ.50 லட்சம் இழப்பீடு தர கேட்டுள்ளனர். ஆனால் கோப்புகளை ஆய்வு செய்தபோது விபத்து ஏற்படுத்திய லாரி எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யவில்லை என்பது தெரிய வந்துள்ளது. ஆகவே நீதிமன்றத்திற்கு போலி ஆவணங்களை தாக்கல் செய்த லாரி உரிமையாளர் அஞ்சலை மீது எங்கள் நிறுவனத்தின் பெயரில் போலியான காப்பீட்டு ஆவணம் தயாரித்து வழங்கியதற்காகவும் எங்கள் நிறுவன பெயர் மற்றும் முத்திரையை தவறாகப் பயன்படுத்தியமைக்காகவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூறியுள்ளார். இந்த புகார் குறித்து வடகாடு போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

இது குறித்து வாகன உரிமையாளர்கள் கூறும் போது, நீண்ட காலமாகவே பல புரோக்கர்கள் வாகனங்களுக்கு குறைந்த கட்டணத்தில் இன்சூரன்ஸ் செய்வதாகக் கூறி வாகன உரிமையாளர்களிடம் பணம் பறித்துக் கொண்டு போலி இன்சூரன்ஸ் ஆவணங்களை வழங்கி வருவது இது போன்ற விபத்து காலங்களில் கண்டறியப்படுகிறது. ஆகவே இந்த வழக்கின் மூலம் போலி காப்பீடு ஆவணங்கள் தயாரித்தவர்களையும் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறினர்.

# வேலூரில் இருந்து சென்னைக்கு பறந்த முன்னாள் இராணுவ வீரரின் இதயம்



வேலூர், பிப். 24 -

திருவண்ணாமலை மாவட்டம், குண்ணத்தூரை சேர்ந்த முன்னாள் இராணுவ வீரர் சரவணன் (39) என்பவர் கடந்த 18-ம் தேதி போளூர்- ஆரணி சாலையில் செல்லும்போது இருசக்கர வாகன விபத்து ஏற்பட்டு ராணிப்பேட்டை சிஎம்சி மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இந்நிலையில் அவர் மூளைச்சாவு அடைந்ததால், அவரது உறவினர்கள் ஒப்புதலுடன் உடல் உறுப்பு தானம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி இதயம் சென்னை எம்ஜிஎம் மருத்துவமனைக்கும். கல்லீரல், ஒரு சிறுநீரகம் வேலூர் சிஎம்சி மருத்துவமனைக்கும், ஒரு சிறுநீரகம் சென்னை ராமச்சந்திரா மருத்துவமனைக்கும் மதியம் 2.00 மணி அளவில் கொண்டுசெல்லப்பட்டது.

வழக்கமாக சென்னைக்கு 3 மணி நேரம் பயண நேரம் எடுக்கும் நிலையில், 1.30 மணி நேரத்தில் இதயம் கொண்டு செல்லப்பட்டது. ஆம்புலன்ஸை தினகரன் என்பவர் ஓட்டிச்சென்றார்.

இதற்காக திருவள்ளுவர் மாவட்டம் திருமலைவாசலில் இருந்து காவல் துறை சார்பில் கிரீன் காரிடர் மூலம் போக்குவரத்து சீரமைக்கப்பட்டது.



அதிமுக இடைக்கால பொதுச்செயலாளராக எடப்பாடி கே.பழனிசாமி தேர்வு செய்யப்பட்டு கடந்த ஜூலை 11 ஆம் தேதி நடைபெற்ற அதிமுக பொதுக்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் செல்லும் என உயர்நீதிமன்ற இரு நீதிபதிகள் அமர்வின் தீர்ப்பை உச்சநீதிமன்றம் உறுதி செய்ததை தொடர்ந்து ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் இடைத்தேர்தல் பணியில் இருக்கும் திருவண்ணாமலை வடக்கு மாவட்ட செயலாளர், செய்யாறு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தூசி கே.மோகன் தலைமையில் பட்டாசு வெடித்து பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கினர். உடன் மாவட்ட, நகர, ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் 42 வது வார்டு பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# கல்குவாரிகளுக்கு செல்லும் உயர் மின்னழுத்த மின் ஒயர் உராய்வினால் 15 க்கும் மேற்பட்ட தெரு விளக்குகள் சேதம்





செய்யாறு, பிப். 24 -

திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் ஒன்றியத்திற்குட்பட்ட சோதியம்பாக்கம் கிராமம் அருகே உள்ள கல்குவாரிகளுக்கு உயர் மின்னழுத்த மின் கம்பம் கிராமங்களின் இடையே ஏரிக்கரை தெரு பகுதியில் செல்வதால் கிராமத்தில் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ள மின் கம்பங்களில் மின்கம்பிகள் உராய்வு ஏற்பட்டதால் சுமார் 15 க்கும் மேற்பட்ட தெருவிளக்குகள் பழுதடைந்து சேதமடைந்துள்ளது.

## கிராமத்தினர், விவசாயிகள் கடும் அவதி

இது போன்று இரண்டு முறைக்கு மேல் ஏற்பட்டுள்ளது. மேலும் சோதியம்பாக்கம் துர்கை அம்மன் கோயில் பகுதியில் உள்ள டிரான்ஸ்பார்மரில் இருந்து விவசாய நிலங்களுக்கு செல்லும் இணைப்புகள் 4 நாட்களாக பழுதடைந்து விவசாயிகள் விவசாய நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்ச மோட்டார்கள் இயங்காததால் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக அம்பேத்கர் நகர் பகுதியில் 4 நாட்களாக குடிநீர் வராததால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகி உள்ளனர். எனவே மின்சார துறையினர் விரைந்து நடவடிக்கை எடுத்து கிராமங்களுக்கு இடையே கல்குவாரிகளுக்கு செல்லும் உயர் மின்னழுத்த மின் கம்பிகளை அகற்றி முறையான மின்சாரத்தை வழங்க வேண்டும் என கிராம பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்து உள்ளனர்.

# அமெரிக்காவில் சிறிய ரக விமான விபத்தில் சிக்கி 5 பேர் பலி

அமெரிக்கா பிப்.24-

அமெரிக்காவில் சிறிய ரக, தனியார் விமானம் ஒன்று விபத்தில் சிக்கியதில் 5 பேர் உயிரிழந்து உள்ளனர்.

அமெரிக்காவின் அர்கான்சாஸ் மாகாணத்தில் புலஸ்கி கவுன்டி பகுதியில் பில் மற்றும் ஹிலாரி கிளிண்டன் தேசிய விமான நிலையத்தில் இருந்து இரட்டை என்ஜின் கொண்ட, சிறிய ரக, பி.இ.20 என்ற எண் கொண்ட, தனியார் விமானம் ஒன்று புறப்பட்டு சென்று உள்ளது. அந்த விமானம் ஒஹியோ மாகாணத்தில் உள்ள ஜான் கிளென் கொலம்பஸ் சர்வதேச விமான நிலையம் நோக்கி சென்று கொண்டிருந்துள்ளது. அந்த விமானத்தில் மொத்தம் 5 பேர் பயணித்து உள்ளனர். விமானம் புறப்பட்டு சில மைல்கள் தொலைவுக்கு சென்றதும் திடீரென விபத்தில் சிக்கி உள்ளது.

இதனை மத்திய விமான போக்குவரத்து கழகம் அனுப்பிய மெயில் ஒன்றும் தெரிவிக்கின்றது. இதனை தொடர்ந்து விசாரணையையும் தொடங்கி உள்ளது. அது பற்றிய தொடக்க கட்ட விசாரணை அறிக்கையையும் விரைவில் வெளியிடும். விபத்து நடந்ததும், லிட்டில் ராக் பகுதியின் காவல்துறை மற்றும் தீயணைப்பு துறையை சேர்ந்த அதிகாரிகள் சம்பவ பகுதிக்கு உடனடியாக சென்றனர். விபத்தில் சிக்கிய அனைவரும் உயிரிழந்து உள்ளனர். எனினும், விபத்து ஏற்பட்டதற்கான சரியான காரணம் எதுவும் தெரிய வரவில்லை. தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

# புதுக்கோட்டையில் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் கலை சங்கமம் இன்று நடைபெறுகிறது

**புதுக்கோட்டை பிப்.24-**

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் வாயிலாக கலை சங்கமம் நிகழ்ச்சி புதுக்கோட்டையில் இன்று நடைபெறுகிறது. மாவட்ட நிர்வாகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் வாயிலாக பொங்கல் கலை விழாவினை முன்னிட்டு, கலை சங்கமம் நிகழ்ச்சி இன்று மாலை 06.00 மணியளவில் புதுக்கோட்டை நகர்மன்றத்தில் (டவுன்ஹால்) நடைபெற உள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், கிராமப்புற கலைகளை ஊக்குவிக்கும் வகையில், பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அதனை முன்னிட்டு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக மாவட்டம்தோறும் கிராமப்புற கலை சங்கமம் நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது.

அதன்படி புதுக்கோட்டை மாவட்டத்தில், வெள்ளிக்கிழமை இன்று புதுக்கோட்டை நகர்மன்றத்தில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் கலை சங்கமம் நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன. இந்நிகழ்ச்சியில், கிராமப்புற கலைகளான தப்பாட்டம், ஒயிலாட்டம், சிலம்பாட்டம், மயிலாட்டம், கோலாட்டம், பொம்மலாட்டம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் கிராமப்புற கலைஞர்களால் சிறப்பாக நடத்தப்பட உள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த பொதுமக்கள், மாணவ, மாணவிகள், இளைஞர்கள் உள்ளிட்ட அனைவரும் இந்த கலை சங்கமம் நிகழ்ச்சியினை கண்டு பயன்பெற வேண்டும். இந்த விழாவில் தமிழக அமைச்சர்கள் எஸ். ரகுபதி, மெய்யநாதன், எம் எல் ஏ முத்துராஜா நகர் மன்ற தலைவர் திலகவதி செந்தில் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பில் இருந்து சென்னைக்கு உள்ளாடைக்குள் மறைத்து

# ரூ.70 லட்சம் மதிப்பிலான தங்கத்தை கடத்திய 2 பெண்கள் கைது

சென்னை பிப்.24-

கொழும்பில் இருந்து சென்னைக்கு உள்ளாடைக்குள் மறைத்து கடத்திய ரூ.69 லட்சத்து 60 ஆயிரம் மதிப்புள்ள 1 கிலோ 387 கிராம் தங்கத்தை பறிமுதல் செய்த சுங்க இலாகா அதிகாரிகள், 2 பெண்களை கைது செய்தனர்.

சென்னை, மீனம்பாக்கம் பன்னாட்டு விமான நிலையத்துக்கு கொழும்பில் இருந்து விமானம் வந்தது. அதில் வந்த பயணிகளை விமான நிலைய சுங்க இலாகா அதிகாரிகள் தீவிரமாக கண்காணித்தனர். அப்போது அந்த விமானத்தில் பயணம் செய்த ஒரு பெண்ணை சந்தேகத்தின் பேரில் நிறுத்தி விசாரித்தனர். அதிகாரிகளிடம் அவர் முன்னுக்கு பின் முரணாக பேசியதால் அவரது உடைமைகளை சோதனை செய்தனர். அதில் எதுவும் இல்லாததால் அவரை தனி அறைக்கு அழைத்துச் சென்று சோதனை செய்தனர். அதில் அவர் உள்ளாடைக்குள் தங்கத்தை மறைத்து வைத்து கடத்தி வந்ததை கண்டுபிடித்தனர்.

அவரிடம் இருந்து ரூ.28 லட்சத்து 70 ஆயிரம் மதிப்புள்ள 572 கிராம் தங்கத்தை பறிமுதல் செய்தனர். அதேபோல் கொழும்பில் இருந்து வந்த மற்றொரு விமானத்தில் பயணம் செய்த பெண்ணின் உள்ளாடைக்குள் தங்கத்தை மறைத்து கடத்தி வந்ததையும் கண்டுபிடித்தனர். அவரிடம் இருந்து ரூ.40 லட்சத்து 90 ஆயிரம் மதிப்புள்ள 815 கிராம் தங்கத்தை கைப்பற்றினார்கள். சென்னை விமான நிலையத்தில் சுங்க இலாகா அதிகாரிகள் நடத்திய சோதனையில் 2 பெண்களிடம் இருந்து ரூ.69 லட்சத்து 60 ஆயிரம் மதிப்புள்ள 1 கிலோ 387 கிராம் தங்கத்தை பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக 2 பெண்களையும் சுங்க இலாகா அதிகாரிகள் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

# கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றிய குழு கூட்டத்தில் அனைத்து துறை அதிகாரிகள் பங்கேற்காததால் கூச்சல், குழப்பம்



ஊத்துக்கோட்டை, பிப். 24 -

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றிய குழு கூட்டம் ஒன்றிய தலைவர் கே.எம்.எஸ். சிவக்குமார் தலைமையில் மன்ற வளாகத்தில் நடைபெற்றது. துணை தலைவர் மாலதி குணசேகரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வாசுதேவன், ரவி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில், வருவாய்த்துறை, சுகாதாரத்துறை, கல்வித்துறை, காவல்துறை, நெடுஞ்சாலை துறை உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகள் பங்கேற்கவில்லை. இதனால் கூட்டத்தில் கலந்து கொண்ட ஒன்றிய குழு உறுப்பினர்கள் தங்களது கோரிக்கைகளை எடுத்துக்கூறியும் அதனை நிவர்த்தி செய்ய துறை சார்ந்த அதிகாரிகள் பங்கேற்கவில்லையே என கூறி கூச்சல் குழப்பத்தில் ஈடுபட்டனர்.

மேலும், நாங்கள் கூறும் குறைகளை கேட்டு நிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் வராததால் கடந்த மூன்று ஆண்டுகளாக எங்களது பகுதியில் வளர்ச்சிப் பணிகள் தடைபட்டுள்ளது என்றும், ஏதோ கூட்டத்திற்கு வந்தோம்! டீ, பிஸ்கட் சாப்பிட்டோம்! புறப்பட்டு சென்றோம் என்றுதான் ஒன்றிய குழு கூட்டம் நடைபெறுகிறது என்று ஆதங்கத்துடன் கூறினர்.

இதற்கு பதில் அளித்து பேசிய வட்டார வளர்ச்சி அலுவலரும், ஒன்றிய தலைவரும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க கலெக்டருக்கு பரிந்துரை செய்வோம்! என்று உறுதி கூறினர்.

ஒன்றிய குழு உறுப்பினர்கள் பேசும்போது புது கும்மிடிப்பூண்டியில் 45 ஆண்டுகால பழமை வாய்ந்த பள்ளி கட்டிடத்தின் மேற்கூரை பூச்சு உதிர்கிறது. எனவே, இதற்கு மாற்றாக புதிய கட்டிடம் ஒன்று கட்டித்தர வேண்டும். இப்பகுதியில் உள்ள மின் கம்பங்கள் பழுதடைந்துள்ளது. அவற்றை மாற்றியமைக்க வேண்டும். சிப்காட் தொழிற்சாலை பகுதியில் துர் நாற்றம் வீசுவதால் சுவாசக் கோளாறு உள்ளிட்ட பல்வேறு நோய்கள் தாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் மேற்கண்ட பகுதிகளில் இயங்கி வரும் தனியார் தொழிற்சாலைகளை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து பேசினார்.

இதன் பின்னர் மன்ற பொருட்களை சரவணன் வாசித்தார். ஒன்றிய பொது நிதியில் ரூ.ஒரு கோடியே 92 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் 33 பணிகளையும், ரூ.97 லட்சத்து 30 ஆயிரம் மதிப்பில் நான்கு பணிகளும் ஆகமொத்தம் 37 பணிகளை ரூ.2 கோடியே 89 லட்சத்தி 80 ஆயிரம் மதிப்பில் மேற்கொள்ளுவது என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்தில் ஒன்றிய குழு உறுப்பினர்கள் எ.மதன்மோகன், எம். சிட்டிபாபு, ஏ.டி.நாகராஜ், ஆர்.ரோஜா, டி.இந்திரா திருமலை, கே.சிவா, வி.சீனிவாசன், டி.கே. வி.உஷா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# சென்னை உயர்நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதியாக வெங்கடாச்சாரி லட்சுமி நாராயணன் நியமனம்




**சென்னை பிப்.24-**

**சென்னை உயர் நீதிமன்றத்தின் பொறுப்பு தலைமை நீதிபதி டி.ராஜா விரைவில் இவருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைக்கவுள்ளார்.**

சென்னை, கடந்த 17ஆம் தேதி நடைபெற்ற உச்ச நீதிமன்றத்தின் கொலிஜியம் கூட்டத்தில் சென்னை உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளாக 8 பேரை நியமனம் செய்ய பரிந்துரை செய்யப்பட்டது. இதில், பெரியசாமி வடமலை, ராமச்சந்திரன் கலைமதி, கோவிந்தராஜன் திலகவதி ஆகிய 3 மாவட்ட நீதிபதிகளையும், வெங்கடாச்சாரி லக்ஷ்மி நாராயணன், லக்ஷ்மண சந்திர விக்டோரியா கவுரி, பாலாஜி, ராமசாமி நீலகண்டன், கந்தசாமி குழந்தைவேலு, ராமகிருஷ்ணன் ஆகிய 5 வழக்கறிஞர்களையும் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்க பரிந்துரை செய்யப்பட்டது.

வழக்கறிஞர்களான விக்டோரியா கவுரி, பாலாஜி, ராமகிருஷ்ணன், மாவட்ட நீதிபதிகளான கலைமதி, திலகவதி ஆகியோர் சென்னை உயர் நீதிமன்ற கூடுதல் நீதிபதிகளாக நியமிக்கப் பட்டதையடுத்து பிப்ரவரி 7-ஆம் தேதி பதவியேற்றுக் கொண்டனர். இந்நிலையில், வழக்கறிஞர் வெங்கடாச்சாரி லக்ஷ்மி நாராயணனை சென்னை உயர் நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதியாக நியமித்து ஜனாதிபதி திரவுபதி முர்மு நேற்று உத்தரவிட்டுள்ளார். சென்னை உயர் நீதிமன்றத்தின் பொறுப்பு தலைமை நீதிபதி டி.ராஜா விரைவில் இவருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைக்கவுள்ளார். இதன்மூலம் சென்னை உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகள் எண்ணிக்கை 58-ஆக உயர்ந்துள்ளது. காலியிடங்களின் எண்ணிக்கை 18 ஆக குறைந்துள்ளது.

# மதுரையில் தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு அமைப்பின் சார்பில் ஆட்சியர் அலுவலகம் எதிரே உண்ணாவிரதப் போராட்டம்



மதுரை பிப்.24-

மதுரையில் தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு அமைப்பின் சார்பில் 26 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஆட்சியர் அலுவலகம் எதிரே மண்டல அளவிலான உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு நில அளவை சங்கம் சார்பாக 26 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் நடைபெற்றது. ஒரு நாள் அடையாள உண்ணாவிரதத்திற்கு மாநில பொருளாளர் ஸ்டேன்லி தலைமையில் மாநில செயலாளர் முத்து முனியாண்டி, மதுரை மாவட்ட தலைவர் விஜயகுமார், திண்டுக்கல் அண்ணாமலை, பரமசிவம், தூத்துக்குடி ராஜேந்திரன், மதுரை கண்ணன், திருநெல்வேலி பாலசுப்பிரமணியன், தென்காசி நீதி ராஜா உள்ளிட்ட நில அளவை சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் தமிழ்நாடு நில அளவைகளப்பணியாளர்கள் சென்னை, திருச்சி, மதுரை, கோவை உள்ளிட்ட நான்கு மண்டலங்களில் நேற்று உண்ணாவிரதபோராட்டம் நடத்தினர். குறிப்பாக நில அளவைகளபணியாளர்கள் பணிச்சுமையை குறைக்க அனைத்து ஆவணங்களும் இணைய வழியாக்கப்பட்டதால் கைப்பிரதிகளில் மாறுதல் செய்யும் நடைமுறையை கைவிட வேண்டும். நில அளவர் முதல் கூடுதல் இயக்குனர் வரை உள்ள காலி பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும் எனவும், நிலம் தொடர்பாக நீதிமன்ற வழக்குகளை அதிகமாக நில அளவர்கள் சந்திப்பதால் நீதித்துறை பயிற்சி வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட 26 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு அமைப்பினர் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே காலை முதல் மாலை 5 மணி வரை உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், சிவகங்கை, ராமநாதபுரம், உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த நில அளவை கள பணியாளர்கள் பங்கேற்றனர்.

# இலங்கை கடற்படை தாக்குதலில் படுகாயம் அடைந்த ஐந்து மீனவர்களுக்கு பொறையார் அரசு மருத்துவமனையில் சிகிச்சை





தரங்கம்பாடி, பிப். 24 -

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடியை சேர்ந்த வேல்முருகன் என்பவருக்கு சொந்தமான பைபர் படகில் நேற்று முன்தினம் இரவு அதே பகுதியை சேர்ந்த பாலமுருகன், அருண் குமார், மாதவன், காசி, முருகன் மற்றும் படகின் உரிமையாளர் உள்ளிட்டோர் கடலுக்கு மீன் பிடிக்க சென்று உள்ளனர்.

அதிகாலை கோடியக்கரைக்கு தென்கிழக்கு கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களின் வலையை பறித்துக் கொண்டதுடன் இரும்பு பைப்பால் கொடூரமாக தாக்கியுள்ளனர். இதில் ஐந்து மீனவர்கள் பலத்த காயமடைந்தனர்.

தொடர்ந்து உடலில் ரத்த கட்டுக்கள் ஏற்பட்டதுடன் ஒரு மீனவருக்கு லேசான எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. வியாழக்கிழமை கரை திரும்பிய மீனவர்கள் தரங்கம்பாடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதலுதவி சிகிச்சை மேற்கொண்ட பின்பு மேல் சிகிச்சைக்காக பொறையாறு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படையினர் படகில் இருந்த இன்ஜினை பறித்துக் கொண்டு தங்களை கொடூரமாக தாக்கியதாகவும், பாதிக்கப்பட்ட மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

படுகாயம் அடைந்த ஐந்து மீனவர்களுக்கு பொறையார் அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பாக மீன்வளத்துறையினர் மற்றும் கடலோர காவல் குழும போலீசாரிடம் மீனவர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

நடுக்கடலில் மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்பட்ட சம்பவம் மயிலாடுதுறை மாவட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கடலோர காவல்துறையை சார்ந்த கூடுதல் காவல் கண்காணிப்பாளர் சங்கர், ஆய்வாளர் ராஜசேகர், உதவி ஆய்வாளர்கள் சுப்பிரமணியன், ரவிச்சந்திரன் ஆகியோர் பொறையார் மருத்துவமனையில் பாதிக்கப்பட்ட மீனவர்களிடம் விசாரணை மேற்கொண்டனர்.

மேலும் தகவல் அறிந்து வந்த தரங்கம்பாடி பேரூராட்சி மன்ற தலைவர் சுகுண சங்கரி குமரவேல் இலங்கை கடற்படையினரால் பாதிக்கப்பட்ட ஆறு மீனவர்களை சந்தித்து ஆறுதல் கூறி பழங்கள் வழங்கினர். உடன் தரங்கம்பாடி வட்டாட்சியர் புனிதா, துணை வட்டாட்சியர் சதீஷ், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் பொன் ராஜேந்திரன், தரங்கம்பாடி வார்டு கவுன்சிலர்கள், தரங்கம்பாடி மீனவ பஞ்சாயத்தார்கள் இருந்தனர்.

# புதுக்கோட்டை மாவட்ட தனியார் பள்ளி செஞ்சிலுவை சங்க மாணவர்களின் பேரணி–நீதிபதி பங்கேற்பு

புதுக்கோட்டை பிப்.24–
புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள தனியார் பள்ளிகளை சேர்ந்த ஆயிரம் மாணவர்கள் குதிரை மற்றும் பேண்ட் வாத்தியங்கள் முழங்க பேரணியாக சென்றனர்.

புதுக்கோட்டை மாவட்ட கல்வித்துறை சார்பில் பிறருக்கு உதவு என்ற கருத்தை மையமாகக் கொண்டு புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள தனியார் பள்ளிகளை சேர்ந்த ஆயிரம் இளம் செஞ்சிலுவை சங்க மாணவர்களின் பேரணி நடைபெற்றது.





புதுக்கோட்டை நீதிமன்ற வளாகத்தில் இருந்து புறப்பட்ட பேரணியை மாவட்ட முதன்மைநீதிபதி அப்துல் காதர் கொடியசைத்து துவக்கி வைத்தார். நிகழ்ச்சிக்கு முதன்மை கல்வி அலுவலர் மணிவண்ணன் தலைமை வகித்தார். நீதிமன்ற உலகத்திலிருந்து புறப்பட்ட பேரணி அண்ணா சிலை, கீழ ராஜவீதி, பிருந்தாவனம் வழியாக நகர்மன்ற வளாகத்தை சென்றடைந்தது. இதன் பின்னர் மவுண்ட்சீயோன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடந்த நிகழ்ச்சியில் செஞ்சிலுவை சங்க கொடியை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் வெங்கடேஸ்வராமெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் தாளாளர் தங்கமூர்த்தி, மவுண்ட்சீயோன்மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் ஒருங்கிணைப்பாளர் கிருபாகரன் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்கள், ஆசிரியர்கள், இளஞ் செஞ்சிலுவை சங்க நிர்வாகிகள், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டையில் மத்திய அரசின் பட்ஜெட்டை கண்டித்து சிஐடியூ ஆர்ப்பாட்டம்

புதுக்கோட்டை பிப்.24–
மத்திய அரசின் பட்ஜெட்டைக் கண்டித்து இந்திய தொழிற்சங்க மையம் (சிஐடியூ) சார்பில் நேற்று புதுக்கோட்டையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



புதுக்கோட்டை சின்னப்பா பூங்கா அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சிஐடியு மாவட்டத் தலைவர் முகமதலிஜின்னா தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் ஸ்ரீதர், மாநில செயலாளர் தேவமணி ஆகியோர் கண்டன உரையாற்றினர். கோரிக்கைகளை விளக்கி மாவட்ட நிர்வாகிகள் அன்புமணவாளன், மாரிக்கண்ணு, ரெத்தினவேல் உள்ளிட்டோர் பேசினர்.

ஆர்ப்பாட்டத்தில் வணிகம், கல்வி, சுகாதாரம், சிறு, குறு தொழில்களை பாதுகாக்காத, வேலை வாய்ப்பை உருவாக்காத, கார்ப்பரேட் கொள்ளைக்கு வழி வகுக்கின்ற ஒன்றிய அரசின் மக்கள் விரோத பட்ஜெட்டை கண்டித்தும், அதானி நிறுவனத்தின் மோசடி குறித்து உரிய விசாரணை மேற்கொள்ள வலியுறுத்தியும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

# அரியலூரில் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அதிமுகவினர் பட்டாசு வெடித்து கொண்டாட்டம்

அரியலூர் பிப்.24–
உச்சநீதிமன்ற தீர்ப்பை அடுத்து, அரியலூரில் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அதிமுகவினர், பட்டாசு வெடித்து, இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

2022 ஜூலை 1-ஆம் தேதி, எடப்பாடி பழனிச்சாமி ஆதரவாளர்கள் நடத்திய பொதுக்குழு கூட்டம் மற்றும் அதில், முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி, அதிமுகவின் இடைக்கால பொது செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லும் என, சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை, டெல்லி உச்சநீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய அமர்வு, உறுதிப்படுத்தி நேற்றைய தினம் தீர்ப்பு வழங்கியுள்ளது.



இதையடுத்து உச்ச நீதிமன்ற தீர்ப்பை வரவேற்று அரியலூர் பேருந்து நிலையம் அருகே அரியலூர் மாவட்ட அதிமுக சார்பில் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது.

அதிமுக ஒன்றியகவுன்சிலர் வைப்பம் சிவபெருமாள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், ஒன்றிய கவுன்சிலர் வெள்ளைச்சாமி, அதிமுக பிரமுகர்கள் பாஸ்கர், வசந்தகுமார், புரட்சி சிவா, பழனியாண்டி, கருணாநிதி, கருப்பையா, வக்கீல் சுகுமார் ரஹீம் டெய்லர் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் நேற்று தலைமை செயலகத்தில், மத்திய பிரதேச மாநிலம், போபாலில் நடைபெற்ற 66 ஆவது அகில இந்திய காவல் திறனாய்வு போட்டியில் வெற்றி பெற்று சாதனை படைத்த தமிழ்நாடு காவல்துறை வீரர்கள் சந்தித்து, பதக்கங்கள் மற்றும் கேடயங்களை காண்பித்து வாழ்த்து பெற்றனர். உடன் தலைமைச் செயலாளர் இறையன்பு, உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பணீந்திர ரெட்டி, காவல்துறை தலைமை இயக்குனர் சைலேந்திரபாபு மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மார்ச் 4-ந் தேதி முதலமைச்சர் வருகையை முன்னிட்டு

# 5 மாவட்டங்களில் பள்ளிகள் செயல்படும் என அறிவிப்பு

சென்னை பிப்.24–
5 மாவட்டங்களில் உள்ள பள்ளிகளில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மார்ச் 4–ந் தேதி ஆய்வு மேற்கொள்ள உள்ளார்.

மதுரை, ராமநாதபுரம், திண்டுக்கல், தேனி, சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் உள்ள பள்ளிகளில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மார்ச் 4–ந் தேதி ஆய்வு மேற்கொள்ள உள்ளார். இதனால் அந்த மாவட்டங்களில் அன்றைய தினம், ஒன்றாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை உள்ள பள்ளிகள் செயல்படும் என்று கல்வித்துறை அறிவித்துள்ளது.

அன்றைய தினம் திங்கட்கிழமை அட்டவணைப்படி பள்ளிகள் செயல்படும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் அதற்குப் பதிலாக 13–ந் தேதி விடுமுறை அளிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# அரியலூரில் கோவை கிருஷ்ணா பேக்கரி & ஸ்வீட்ஸ் புதிய கிளை திறப்பு விழா

அரியலூர் பிப்ரவரி 24–
அரியலூரில் கோவை கிருஷ்ணா பேக்கரி & ஸ்வீட்ஸ், புதிய கிளை திறப்பு விழா நடைபெற்றது.




அரியலூரை சேர்ந்த அமுதன் என்பவருக்கு சொந்தமாக, கோவைகிருஷ்ணா பேக்கரி & ஸ்வீட்ஸ் என்ற பெயரில், அரியலூரில் மார்க்கெட் தெரு, தேரடி, சத்திரம், ஆகிய இடங்களில் கேக் வகைகள் இனிப்பு மற்றும் கார வகைகள் கொண்ட விற்பனை நிலையங்கள் உள்ளன.

இந்நிலையில் அதே பெயரில், அரியலூர் செந்துறை புறவழிச் சாலையில் அமுதன் உருவாக்கியுள்ள புதிய கிளை தொடக்க விழா, நேற்று கோலாகலமாக நடைபெற்றது. இதில் அரியலூர் மற்றும் சுற்று வட்டார பகுதியை சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் பங்கேற்று வாழ்த்து தெரிவித்தனர்.



செருவாவிடுதி மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் வட்டார மருத்துவ அலுவலர் சௌந்தரராஜன் புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி இருக்கை மருத்துவர் இந்திராணி தம்பதியினரின் மகன் மோகன ஹரிஹரன் மணமகள் ஜனனி ஆகியோரது திருமண விழாவில் மணமக்களை மணவிட்டார் வாழ்த்திய போது எடுத்த படம்.

# அரியலூரில் கல்லூரி மாணவ, மாணவிகள் பங்கேற்ற, தமிழ் கனவு விழா



அரியலூர் பிப்.24–
அரியலூரில் கல்லூரி மாணவ, மாணவிகள் பங்கேற்ற, தமிழ் கனவு விழா நடைபெற்றது.

அரியலூர் மாவட்டத்துக்கு உட்பட்ட, அரசு மற்றும் தனியார் கலை அறிவியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள், மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மாணவ, மாணவிகள் பங்கேற்ற, தமிழ் கனவு என்கிற அரசு விழா, அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி கலையரங்கத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் கலைவாணி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) பூங்கோதை முன்னிலை வகித்தார். மாவட்ட ஆட்சியரக ஹெச்.எஸ் முத்துக்கிருஷ்ணன் வரவேற்று பேசினார்.

விழாவில் பங்கேற்ற மாணவ, மாணவிகளுக்கு, தமிழ் கனவு என்கிற காணொளி காட்சி திரையிட்டு காண்பிக்கப்பட்டது. மேலும் தமிழ் வளர்ச்சி துறைசார்பாக நடைபெற்ற, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு, சான்றிதழ்களை கவிஞர் நந்தலாலா வழங்கி பேசினார். நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவ, மாணவிகளின் கேள்விகளுக்கு, டாக்டர் யாழினி பதில் அளித்து பேசினார். ஜெயங்கொண்டம் அரசு கலைக்கல்லூரி பேராசிரியர் ராஜமூர்த்தி, தமிழ் கனவு விழா தொடர்பான நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். விழா நடைபெற்ற கலையரங்க வளாகத்தில் பல்வேறு துறைகள் சார்பில், காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன.

அரியலூர் வருவாய் ஆய்வாளர் முருகன், கிராம நிர்வாக அலுவலர்கள் நந்தகுமார், உமா சங்கர், மற்றும் அரியலூர் மாவட்ட அளவிலான பல்வேறு கல்லூரிகளின் பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். முடிவில் சிவா நன்றி கூறினார்.

# புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் பாஜக சிறுபான்மை பிரிவு தேசிய செயலாளர் வேலூர் இப்ராஹிம் கைது

அறந்தாங்கி பிப்.24–
புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் பாஜக சிறுபான்மை பிரிவு தேசிய செயலாளர் வேலூர் இப்ராஹிம் நேற்று போலீசாரால் கைது செய்யப்பட்டார்.



அறந்தாங்கியில் நேற்று பாஜக சார்பில் கிளை கமிட்டி கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பாஜக சிறுபான்மை பிரிவு தேசிய செயலாளர் வேலூர் இப்ராஹிம் கலந்து கொண்டார்.

பின்னர் மதிய ஓய்விற்காக அறந்தாங்கியில் உள்ள ஆய்வு மாளிகையில் தங்கி இருந்தார். அங்கிருந்து கோட்டை பட்டினத்தைச் சேர்ந்த சிறுபான்மை பிரிவு மாவட்ட பொதுச் செயலாளர் சலீமை சந்திப்பதற்காக புறப்பட்டார்

இவரது வருகைக்கு கோட்டைப்பட்டினம் ஜமாஅத் அமைப்பினர் எதிர்ப்பு தெரிவித்து இருப்பதாக போலீஸாருக்கு தகவல் கிடைத்தது. இதைக் காரணம் காட்டி கோட்டைப்பட்டினம் செல்வதை தவிர்க்குமாறு வேலூர் இப்ராஹிமிடம் போலீசார் தெரிவித்தனர்

அதையும் மீறி அவர் மற்றும் பாஜக நிர்வாகிகள் கோட்டைப்பட்டினம் செல்வதாக தெரிவித்தனர். இதையடுத்து, முன்னெச்சரிக்கையாக கைது செய்வதாக கூறி வேலூர் இப்ராஹிம்மை ஆய்வு மாளிகையில் வைத்து போலீசார் கைது செய்தனர்

இதே போன்று கடந்த 10 நாட்கள் முன்பு அறந்தாங்கி அருகே நாகுடியில் பாஜக சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கோட்டைப்பட்டினம் சென்றபோது வேலூர் இப்ராஹிம்மை நாகுடி போலீசார் கைது செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி பள்ளிக் கல்வித் துறை மூலமாக பிஜசிஒ செயற்கைக்கோள் அறிவியல் பயிற்சியில் பங்குப் பெற்ற இராணிப்பேட்டை மாவட்டத்தை சேர்ந்த 5 அரசுப் பள்ளிகளைச் சார்ந்த 21 மாணவ மாணவியர்களுக்கும், 4 ஆசிரியர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது. இவர்கள் அனைவரும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் வளர்மதியிடம் பாராட்டுச் சான்றிதழை காண்பித்து வாழ்த்து பெற்றனர். இந்த நிகழ்ச்சியின் போது மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் உஷா, மாவட்ட கல்வி அலுவலர் கோ.சுப்பாராவ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# ஆவுடையார்கோவிலில் தன்னார்வலர்களுக்கு சுகாதாரம் பற்றிஒரு நாள் பயிற்சி

ஆவுடையார்கோவில், பிப்.24–
புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் ஒன்றியத்தில் குடிநீர், கழிப்பறை, சுகாதாரம் தன் சுத்தம் ,மாதவிடாய் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து ஆகியஐந்து கண்களின் சுகாதார நலக்குழு தன்னார்வலர்கள் 50 நபர்களுக்குபேங்க் ஆப் அமெரிக்கா மற்றும் கிராமாலயா தொண்டு நிறுவனம்இணைந்துதன்னார் வலர்களுக்கு ஒரு நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு வட்டார மையசிறப்பு பயிற்சியாளர்கள் கனகா ,கரோலின் மேரி,மரிய அனிட்டா,ஆகியோர் தலைமை தாங்கினர்,கிராமாலயாவின் தொழில்நுட்ப அலுவலர் சிவனேசன் முன்னிலை வகித்தார்,தொடக்கத்தில் எங்கு இலட்சியம் இருக்கிறதோ அங்கு தொலைநோக்கு பார்வை இருக்கும்என்ற பாடல் மூலம் பயிற்சி தொடங்கப்பட்டது.



நிகழ்ச்சியில் கிராமாலயாவின்நிறுவனர் பத்மஸ்ரீ தாமோதரனின் 36 வருட பயணங்களும் சாதனைகளும் விளக்கப்பட்டன,நிகழ்ச்சியில் சுகாதாரத்தின் முக்கிய கூறுகளும் கிராம அளவில் செய்த பல்வேறு சாதனைகளையும்கூறினார்கள், மேலும்மாதவிடாய் சுகாதாரத்தினை பற்றிபழனிச்செல்வி கூறினார், ஊட்டச்சத்து விழிப்புணர்வு பற்றிசத்யா கூறினார், மேலும் பயிற்சியாளரை மகிழ்விக்க சுகாதார பாடல்களை பாடினார்,சுகாதார நலக்குழு தன்னார்வலர்களுக்கு கிராமாலயாவின் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் பழனிச்செல்வி நன்றி உரை நிகழ்த்தினார், இறுதியில் சுகாதார நலக்குழு தன்னார்வலர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.



அதிமுக இடைக்கால பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமியை பொதுக்குழு எடுத்த முடிவு செல்லும் என்ற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை வரவேற்று ஈரோடு கிழக்கு தொகுதியில் களப்பணியில் ஈடுபட்டுள்ள கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணமுரளி குட்டியப்பா தலைமையில் கட்சி நிர்வாகிகள் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர். உடன் முன்னாள் அமைச்சர் ராஜலட்சுமி, கடையநல்லூர் வடக்கு ஒன்றிய செயலாளர் வசந்தம் முத்துப்பாண்டி, கடையநல்லூர் நகர செயலாளர் முருகன், தெற்கு ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார், தகவல் தொழில்நுட்ப பிரிவு துணைசெயலாளர் சிவா ஆனந்த், மேலநீலிதநல்லூர் ஒன்றிய செயலாளர் வேல்முருகன், மருத்துவர் திலீபன் சந்திரன், மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# அறந்தாங்கியில் 5 பைசாவுக்கு சிக்கன் பிரியாணி–பிரியாணி கடை அசத்தல் விளம்பரம்

அறந்தாங்கி பிப்.24–
பழைய நாணயங்களுக்கு சிக்கன் பிரியாணி அசத்திய அறந்தாங்கி பிரியாணி கடை நிரம்பி வழியும் கூட்டம்.

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கியில் புதிதாக திறக்கப்பட்ட ராஜலட்சுமி அசைவ உணவகத்தில் நேற்றைய தினம் திறப்பு விழாவை முன்னிட்டு இன்றைய தலைமுறை பார்த்திராத பழைய நாணயங்களை நினைவுபடுத்தும் வகையில் 5 பைசா 10 பைசா மற்றும் 20, 25 பைசா உள்ளிட்ட பழைய நாணயம் கொண்டு வருபவர்களுக்கு சிக்கன் பிரியாணி மற்றும் சில்லிச் சிக்கனை வழங்கி வருகின்றனர்.



அசைவ உணவு திறப்பு விழா சலுகையால் அறந்தாங்கி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த பொதுமக்கள் அதிகளவில் முந்தைய பழைய நாணயங்களை கொடுத்து பிரியாணி மற்றும் சில்லி சிக்கனை நீண்ட வரிசையில் நின்று வாங்கி செல்கின்றனர்.

புதிய கடை திறப்பு விழா மக்களிடம் போய் சேர வேண்டும் அதற்காக புதிய முறையை கையாள நினைத்த போது இந்த பழைய நாணயங்களை கொண்டு வந்தால் பிரியாணி என்று அறிவித்தோம். பழைய நாணயங்களை தேடிப்பிடித்து கொண்டு வந்தவர்களுக்கு பிரியாணி, சில்லி சிக்கன் வழங்கினோம் என்று கடை ஊழியர்கள் கூறினர்.

Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# அதிமுக பொதுக்குழு வழக்கில் ஈபிஎஸ்ஸுக்கு ஜாக்பாட்

# பாஜக தேசிய செயலாளர் வேலூர் இப்ராஹிம் அறந்தாங்கியில் கைது






# விபத்து ஏற்படுத்தி விட்டு போலி ஆவணம் இன்சூரன்ஸ் நிறுவனம் பகீர்


| சென்னை / புதுக்கோட்டை | 24.02.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை

வரலாறு

நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**நானம்மாள்** , இந்திய யோகக்கலைப் பயிற்சியாளர் (பி.1920) (இ.2019)



**காயத்ரி சக்ரவர்த்தி ஸ்பிவாக்** , இந்திய மெய்யியலாளர் (பி.1942)



**ஜெ. ஜெயலலிதா** , அரசியல்வாதி, தமிழ்நாட்டின் 16வது முதலமைச்சர் (பி.1948) (இ.2016)



**ஸ்டீவ் ஜொப்ஸ்** , ஆப்பிள் நிறுவனத்தை ஆரம்பித்த அமெரிக்கத் தொழிலதிபர் (பி.1955) (இ.2011)



## இன்றைய நினைவு நாள்

**பா. தாவூத்ஷா** , தமிழகப் பத்திரிகையாளர், எழுத்தாளர், சொற்பொழிவாளர் (பி.1885) (இ.1969)



**மாயாண்டி பாரதி** , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1917) (இ.2015)



**ஸ்ரீதேவி** , இந்தியத் திரைப்பட நடிகை (பி.1963) (இ.2018)

